நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

# பட்டுப் போகும் பட்டுப் புழு உற்பத்தி

எஸ். முகமது கவுஸ்

First Published : 01 Aug 2011 03:37:11 AM IST



பிரியாங்குப்பத்தில் விவசாயியின் வீட்டில் பாத்தி கட்டி உணவுக்காக மல்பாரி தழைகளுக்கு மத்தியில் 3-ம் பருவத்தில் விடப்பட்டுள்ள பட்டுப் புழுக்கள். (உள் பட

திருவள்ளூர், ஜூலை 31: தமிழக பட்டுப் புழு வளர்ச்சித் துறையினரின் அலட்சியத்தால் திருவள்ளூர் மாவட்ட பட்டுப் புழு உற்பத்தி விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக உள்ளதால் பல விவசாயிகள் தங்களது தொழிலை மாற்றி வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் பட்டுப்புழு உற்பத்தி செய்யும் விவசாயிகள் 250-க்கும் மேற்பட்டோர் இருந்தனர்.

நாளடைவில் பட்டுப் புழு வளர்ச்சித் துறையின் முறையான வழிகாட்டுதலும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகளும் வழங்காததாலும் பல விவசாயிகள் இத்தொழிலை விட்டுச் சென்றுள்ளனர்.தற்போது இம்மாவட்டத்தில் வெறும் 65 விவசாயிகள் மட்டுமே உள்ளனர்.

பட்டுப்புழு உற்பத்தி செய்ய குறைந்தபட்சம் 2000 சதுர அடி இடமும், புழுக்களுக்கு உணவாக அளிக்கப்படும் மல்பரி இலை பயிரிட குறைந்தபட்சம் 1 ஏக்கர் நிலப்பரப்பும் இருக்க வேண்டும்.

பட்டுப்புழு உற்பத்தி முட்டையில் தொடங்கி முழு வளர்ச்சி அடைவது வரை 23 நாள்கள் தேவைப்படும். அந்த 23 நாள்களில் 6 பேரின் உழைப்பு அவசியமாகிறது.பட்டுப்புழு முட்டைப்

பருவத்தில் இருந்து கூடு வரை 6 பருவமாக வளருகிறது. ஒவ்வொரு பருவமும் 3 முதல் 5 நாள்களுக்குள் நடைபெறும்.

முட்டைப் பருவம், தோல் உரிப்பு பருவம், வளர்ச்சிப் பருவம், கூடு கட்டும் பருவம், கூடு முழுமை அடையும் பருவம் என ஒவ்வொரு பருவத்தையும் சீராக கண்காணித்து பிரித்து அந்தந்த பருவத்துக்கு ஏற்ற உஷ்ண நிலை, பாதுகாப்பு முறைகளில் பாதுகாப்பாக வைத்து கண்காணிக்க வேண்டும்.

இடையே புழுக்களுக்கு நோய்த் தாக்குதல்கள் உள்ளதா? என கண்டறிந்து அதற்கு தேவையான மருந்துகளை இட்டு அவற்றை பாதுகாக்க வேண்டும். இவ்வளவு நுணுக்கமாக உற்பத்தி செய்து அதை முறையான லாபத்தில் விற்க முடியாத நிலை உள்ளதால் விவசாயிகள் அதிருப்தியில் தொழிலையே விட்டுச் செல்லும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து திருவள்ளூரை அடுத்த பிரயாங்குப்பத்தில் பட்டுப்புழு உற்பத்தி விவசாயி ஜீவரத்தினம் கூறும்போது, "பட்டுப் புழு உற்பத்தியில் அதிக லாபம் கிடைக்கும் எனவும், பட்டுப்புழுக்களை உற்பத்தி செய்வதில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாகவும், கடந்த 3 ஆண்டுகளாக இத்தொழிலை செய்து வருகிறேன்.

இத்தொழிலில் சிறிது கவனம் சிதறினாலும் கடும் நஷ்டம் ஏற்படும். நல்ல முறையில் திட்டமிட்டு நஷ்டமில்லாமல் உற்பத்தி செய்தாலும் இன்றைய நிலையில் லாபம் பார்க்க முடியவில்லை.

அதற்கு காரணம் இம்மாவட்டத்தில் பட்டுப் புழு வளர்ச்சித் துறைக்கு அலுவலகம் இல்லை. மேலும் பட்டுப் புழு உற்பத்திக்கு தேவையான மூலப்பொருள்கள் எதுவாக இருந்தாலும் அதை வாணியம்பாடி அல்லது ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் உள்ள பழமனேரிக்குச் சென்று வாங்கி வர வேண்டும்.புழு உற்பத்திக்கு தேவையான முட்டை, தட்டிகள், நோய் தடுப்பு மருந்துகள் என எந்த தேவைக்கும் 200 முதல் 300 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய சூழல் உள்ளது. மேலும் இங்கு அலுவலகமோ, அலுவலர்களோ இல்லாததால் விவசாயிகளுக்கு முறையான வழிகாட்டுதல் கிடையாது.

புழுக்கள் கூடு கட்டி முழு வளர்ச்சி அடைந்த 3 நாள்களுக்குள் அதை விற்பனை செய்ய வேண்டும். இல்லையென்றால் புழுவுக்கு இறக்கை முளைத்து கூட்டை உடைத்துக் கொண்டு வெளியில் வந்து விட்டால் அந்த பட்டை குப்பையில்தான் போட வேண்டும்.இதனால் ஆந்திர மாநிலம் அல்லது தருமபுரி எங்கு எடுத்துச் சென்றாலும் அப்போதுள்ள மார்க்கெட் நிலவரத்துக்கு ஏற்றபடி லாபமோ, நஷ்டமோ வந்த விலைக்கு விற்றுவிட்டு வரும் நிலை உள்ளது.

பட்டுப்புழு உற்பத்தியில் அனைத்து உற்பத்தி பொருள்கள், பராமரிப்பு செலவுகள், பணியாள் கூலி என ஒரு கிலோவுக்கு ரூ.150 வரை செலவாகிறது. இதுதவிர உற்பத்தி பொருளை எடுத்துச் செல்லும் போக்குவரத்து செலவு குறைந்தபட்சம் ரூ.2000 வரை செலவாகிறது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பட்டுப்புழு ஒரு கிலோ ரூ.300 முதல் ரூ.350 வரை விற்பனையானது.

ஆனால் கடந்த ஆண்டு முதல் இந்தியாவில் பட்டு உற்பத்தி குறைவு என சீனாவில் இருந்து இறக்குமதி செய்ததால் உள்ளூர் பட்டுக்கு விலை குறைவு ஏற்பட்டது.

இன்று ஒரு கிலோ தரமான பட்டு ரூ.120 முதல் ரூ.150 வரை மட்டுமே விற்க முடிகிறது. இதனால் இத்தொழிலை பலர் விட்டு வேறு தொழிலுக்கு செல்கின்றனர்' என்றார்.

இது குறித்து பட்டு வளர்ச்சித் துறையைச் சேர்ந்த அலுவலர் சிலரை கேட்டபோது, "பட்டு உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தில் இருந்தது. நாளடைவில் 2-வது இடத்துக்கு வந்துள்ளது.இந்தியாவின் மொத்த உற்பத்தி தேவை ஒரு ஆண்டுக்கு 25 மெட்ரிக் டன். அதில் 15 மெட்ரிக் டன் பட்டு இந்தியாவிலேயே உற்பத்தியாகிறது.

தமிழகத்தில் மட்டும் 6 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது.தற்போது பட்டு உற்பத்தியில் கர்நாடகம் முதலிடமும், தமிழகம் 2-ம் இடமும், ஆந்திர மாநிலம் 3-ம் இடத்திலும் உள்ளது.திருவள்ளூர் மாவட்டம், மட்டுமல்ல இந்திய அளவில் பட்டு என்றாலே காஞ்சிபுரம் என பெயர் பெற்ற மாவட்டத்திலேயே பட்டு வளர்ச்சித் துறை அலுவலகம் இல்லை.வேலூர் மாவட்டத்தில் உள்ள அலுவலகத்தில் இருக்கும் அதிகாரிகளும் களப்பணியில் பணியாற்றும் இளநிலை பட்டு ஆய்வாளர்களிடம் பட்டு முட்டைகள் விநியோகம் மற்றும் கொள்முதல் என்ற பெயரில் இளநிலைப் பட்டு ஆய்வாளர்களிடம் பட்டு முட்டைகளை கட்டாயப்படுத்தி விநியோகம் செய்யாமலே, விநியோகம் செய்ததாக கூறி அதற்கு ஈடான பணம் பறித்து கணக்கு காட்டும் வேலையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இளநிலை ஆய்வாளர்களை அந்தந்த உதவி இயக்குநர்களே பணியிட உள்மாறுதல் செய்துக் கொள்ளாலாம் என தலைமை நிர்வாகத்தில் இருந்து சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதால் அவர்களுக்கு பணியாத இளநிலை ஆய்வாளர்களை அவர்கள் இஷ்டத்துக்கு பணியிடம் மாற்றுகின்றனர்.குடும்ப சூழ்நிலை காரணமாக பணி மாறுதலுக்கு உடன்படாத ஆய்வாளர்களிடம் இருந்து ரூ.20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை பணத்தை வசூலித்து அதே இடத்தில் பணிபுரிய அனுமதிக்கின்றனர்.

மேலும் மாவட்டத்துக்குள் உற்பத்தி பொருள்கள் கிடைப்பதாலும், விற்பனையும் சுலபமாக இருப்பதாலும் விவசாயிகள் கூடுதல் லாபம் அடைவதுடன் பட்டுப்புழு உற்பத்தி செய்ய ஆர்வமாக முன்வருவர்' என்றனர்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

First Published : 01 Aug 2011 09:40:08 AM IST

செங்கல்பட்டு, ஜூலை 31: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் செங்கல்பட்டு ஏழுமலை திருமண மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுராந்தகம், செய்யூர், உத்தரமேரூர், மாமண்டூர், சாலவாக்கம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாயிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். மாவட்ட ஆட்சியர் சிவ சண்முகராஜா தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு மாவட்ட இணை வேளாண்மை இயக்குநர் குரு ராஜ்சிங், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் மனோகர், செங்கல்பட்டு சார் ஆட்சியர் ஆனில் சுனேஜா காஞ்சிபுரம் கூடுகல் ஆட்சியர் லலிதா உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட ஆட்சியரின் நேரமுக உதவியாளர் சம்பத் குமார் வரவேற்றுப் பேசினார். செங்கல்பட்டு வட்டாட்சியர் வெங்கடேசன் விவசாயிகளின் குறைதீர் மனுக்களை வாசித்தார்.

எம்எல்ஏ-க்கள், அனகை முருகேசன், ராஜி, தண்டரை மனோகரன், வாலாஜாபாத் பா. கணேசன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். விவசாயிகள் தங்களது கோரிக்கைகளையும் குறைகளையும் கூறினர். விவசாயிகள் குறைகளை கேட்ட மாவட்ட ஆட்சியர் குறைத்தீர்க்கும் நாட்களில் ஆனைத்து துறை அதிகாரிகளும் கலந்து கொள்ளவேண்டும் என்றும் குறைகளை கூறும் போதே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டு நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் கூறினார். மாவட்ட ஆட்சியரின் தலையீடு இருந்தால் தான் நிவர்த்தி செய்ய முடியும் என்ற மனுக்களுக்கு அந்தந்த துறையினர் ஆவணங்களை தயார் செய்து உடனடியாக கொண்டு வரவேண்டும்.

கூட்டத்தில் வருவாய் துறை வட்டாட்சியர் வெங்கடேசன். துணை வட்டடாட்சியர்கள் விமல்குமார், எட்டியப்பன், நகராட்சி ஆணையர் (பொறுப்பு) சுப்புராஜ், நில அளவை அலுவலர் உதயசூரியன், பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் வெங்கடேசன், போக்குவரத்து துறை துணை மேலாளர் இளங்கோவன், மாவட்ட கல்வி அலுவலர் ராணி உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**மண் வள பாதுகாப்பு உத்திகளை பின்பற்ற வேண்டும்: விவசாயிகளுக்கு அமைச்சர் வேண்டுகோள்**

First Published : 01 Aug 2011 09:37:53 AM IST

உதகை, ஜூலை 31: நீலகிரி மாவட்டத்தில் பெருமழைக் காலங்களில் விவசாயிகள் தங்களது பயிர்களை பாதுகாக்கும் வகையில் அனைத்து மண் வள பாதுகாப்பு உத்திகளையும், சாகுபடி நெறிமுறைகளையும் தவறாமல் பின்பற்ற வேண்டுமென, தமிழக உணவுத்துறை அமைச்சர் புத்தி சந்திரன் வலியுறுத்தினார்.

நீலகிரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1,244 விவசாயிகளுக்கு ரூ.15.93 லட்சம் நிவாரணத் தொகை வழங்கும் நிகழ்ச்சி உதகை அருகேயுள்ள தொரைஹட்டி கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின்

சார்பிலான இந்த நிவாரணத் தொகைகளை விவசாயிகளுக்கு வழங்கிய அமைச்சர் புத்தி சந்திரன் பேசியதாவது:

÷கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தூனேரி, எப்பநாடு மற்றும் கடநாடு கிராமங்களில் பெய்த கன மழையால் விவசாய நிலங்களில் வெள்ளம் புகுந்து சுமார் 265.49 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த மலைக்காய்கறிகள் சேதமடைந்தன. இந்த வெள்ள சேதத்தினை தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் நேரடியாக ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பட்டியல் மற்றும் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பளவு ஆகியவை கணக்கெடுக்கப்பட்டன.

÷இந்த வெள்ள சேதத்தினால் உருளைக்கிழங்கு பயிர் 91 ஹெக்டேரிலும், முட்டைக்கோஸ் 7.09 ஹெக்டேரிலும், காரட் பயிர் 73.25 ஹெக்டேர் பரப்பளவிலும், இதர காய்கறிகள் 94.32 ஹெக்டேர் பரப்பளவிலும் சேதமடைந்திருந்தன. இந்த மழை வெள்ளத்தால் 1,244 விவசாயிகள் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் துயர் துடைக்கும் வகையில் 1 ஹெக்டேர் பயிர் இழப்பிற்கு ரூ.6,000 வீதம் நிவாரணம் வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டதையடுத்து இந்த நிவாரணத் தொகை தற்போது வழங்கப்படுகிறது.

÷இதற்காக தமிழக அரசின் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.15.93 லட்சம் நிதி தமிழக அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளும் பெற்று பயனடையலாம். இனி வரும் காலங்களில் மழை வெள்ளத்திலிருந்து விவசாயிகள் தங்கள் பயிர்களை பாதுகாக்கும் வகையில் அனைத்து மண் வள பாதுகாப்பு உத்திகளையும், சாகுபடி நெறிமுறைகளையும்ம் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

÷அண்மையில் படகர் சமுதாய மக்கள் முதல்வரை நேரில் சந்தித்தபோது அவர்களது கோரிக்கைகளை கேட்டு நீலகிரி மாவட்டத்தில் நஞ்சநாடு மற்றும் காயகண்டி ஆகிய பகுதிகளில் தேயிலைத் தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துள்ளார். அதேபோல, படகர் இன மக்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென, பிரதமருக்கும் கடிதம் எழுதியுள்ளார். நீலகிரி மாவட்ட மக்களின் நலனில் பெரும் அக்கறை கொண்ட தமிழக முதல்வர் படகர் இன மக்களின் அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றி தருவார் எனவும் குறிப்பிட்டார். இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஹால்துரை, உதவி இயக்குநர் ஜெகதீஷ்குமார், தூனேரி ஊராட்சி தலைவர் பீமன், தொரைஹட்டி கிராம தலைவர் மாயன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**களப்பணியில் ஈடுபட்ட வேளாண் பல்கலை. மாணவிகள்**

First Published : 01 Aug 2011 09:44:40 AM IST

கோபி, ஜூலை 31: கோபியில் உள்ள வாழைத் தோட்டத்தில் களை எடுக்கும் பணியில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் ஈடுபட்டனர்.

÷கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் கோபி பகுதியில் கடந்த 30 நாட்களாக தங்கி பல்வேறு வயல் மற்றும் தோட்டங்களுக்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்து கருத்துகளைக் கேட்டறிந்து வருகின்றனர்.

÷பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் எஸ்.கலைவாணி, எஸ்.பழனிச்சாமி, பி.முத்தையா மனோகரன் ஆகியோரது அறிவுரையின்படி இறுதியாண்டு பயிலும் மாணவிகள் ஆர்.சிந்தியா, ஏ.கார்த்திகா, கே.ரூபிகா, கே.ஆர்.சிந்துஸ்ரீ, பி.வித்யாவதி, எஸ்.பிரியதர்ஷினி, ஆர்.அபிராமி ஆகிய மாணவிகள் இதில் பங்கேற்றனர். கரட்டடிபாளையம் கிராமத்தில் தங்கி விவசாயிகளின் தோட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டு மண் பரிசோதனை, மஞ்சள் பயிருக்குத் தேவையான உரம், மண்ணில் உள்ள சத்துக்கள் என்ன என்பது குறித்த ஆய்வுகளைச் செய்து விவசாயிகளுக்கு தேவையான கருத்துகளையும் கூறி வருகின்றனர்.

**"21 ஹெக்டேரில் கம்பு விதைப் பண்ணைகள்'**

First Published : 31 Jul 2011 12:00:02 PM IST

திருச்சி, ஜூலை 30: திருச்சி மாவட்டத்தில் 21.2 ஹெக்டேரில் கம்பு விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன என வேளாண் துறை இணை இயக்குநர் ஜே. சேகர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது:

"ஊட்டச்சத்து பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காகத் தீவிர சிறுதானிய உற்பத்தி திட்டத்தின் மூலம் திருச்சி மாவட்டத்தில் மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி, முசிறி, தொட்டியம், தாத்தையங்கார்பேட்டை, துறையூர், உப்பிலியபுரம், மண்ணச்சநல்லூர், புள்ளம்பாடி ஆகிய வட்டாரங்களில் 21.2 ஹெக்டேர் பரப்பளவில் கம்பு விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பண்ணைகளிலிருந்து 17.2 மெட்ரிக் டன்கள் விதைகள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. இந்த விதைகளுக்குத் தீவிர சிறுதானிய உற்பத்தி திட்டத்தின் மூலம் கிலோவுக்கு ரூ. 10 மானியமாக வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் விதைகள் விவசாயிகளுக்கு கம்பு பயிர் சாகுபடி செய்ய விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சத மானியத்தில் விநியோகம் செய்யப்படவுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் ஐ.சி.எம்.வி. 221 ரக கம்பு விதைப் பண்ணையாகப் பயிரிடப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்யப்படவுள்ளது.

கம்பு தானியத்தில் புரதச்சத்து 10.6 சதம், மாவுச்சத்து 71.6 சதம், நார்சத்து 1.3 சதம், கொழுப்புசத்து 5.1 சதம், தயமின் 0.0003 சதம், நியாசின் 0.0032 சதம், மாங்கனீஸ் ஒரு சதம், துத்தநாகம் 0.002 சதம் ஆகியவை உள்ளன.

இந்தியாவில் நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், கம்பு போன்ற சிறுதானிய பயிர்கள் உடல் நலத்துக்குச் சிறந்த உணவாகக் கருதப்படுகிறது.

கம்பில் இருந்து கூழ், களி, ரொட்டி, முறுக்கு, தோசை போன்ற தின்பண்டங்கள் தயாரிக்கலாம்' என்றார் சேகர்.

**முட்டை விலை**

First Published : 31 Jul 2011 09:46:27 AM IST

நாமக்கல், ஜூலை 30: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.37, சென்னையில்

ரூ. 2.45.

**கறிக்கோழி விலை**

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்

முதல் விலை கிலோ ரூ.46, முட்டைக் கோழி கிலோ

**நவீன முறையில் வெள்ளாடு வளர்ப்புப் பயிற்சி**

First Published : 31 Jul 2011 12:17:50 PM IST

பெரம்பலூர், ஜூலை 30: பெரம்பலூர் அருகே வாலிகண்டபுரத்தில் அமைந்துள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் நவீன முறையில் வெள்ளாடு வளர்த்தல் குறித்த தொழில்நுட்பப் பயிற்சி சனிக்கிழமை நடைபெற்றது.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட ஆடு வளர்ப்போர், ஆடு வளர்ப்புத் தொழிலில் ஆர்வமுள்ள சிறு, குறு விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுவினர், இளைஞர்களுக்காக நடைபெற்ற இந்தப் பயிற்சிக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். இரா. மாரிமுத்து தலைமை வகித்தார்.

பயிற்சியில் அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் கால்நடை மருத்துவர். சிவகுமார், ஆடு வளர்ப்பில் உள்ள அனுகூலங்கள், வளர்ப்புக்கேற்ற வெள்ளாட்டு இனங்களைத் தேர்வு செய்தல், கொட்டகை

அமைப்பு, கொட்டில் முறையில் ஆடு வளர்ப்பு, உயர்மட்டத் தரை முறையில் ஆடு வளர்ப்பு, தீவன மேலாண்மை, பசுந்தீவன உற்பத்தி முறைகள், இனவிருத்தி பராமரிப்பு முறைகள், நோய் மேலாண்மை முறைகள், இளங்குட்டிகள் பராமரிப்பு முறைகள், உள் மற்றும் வெளி ஒட்டுண்ணிகள் தடுப்பு முறைகள் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளித்தார்.

பயிற்சியில் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய வேளாண் விரிவாக்க தொழில்நுட்ப வல்லுநர் மணிகண்டன், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தினமலர்

**விதை கிராமத்திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,00:40 IST

கும்பகோணம்: ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு விதை கிராமத்திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. தஞ்சாவூர் மாவட்டம் ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் ஒரத்தநாடு வட்டம் பருத்திக்கோட்டை கிராமத்தில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி உதவியுடன் விதை கிராமத்திட்டத்தின் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பயறுவகை பயிர்கள் பற்றிய இரண்டாம் கட்ட பயிற்சி நடந்தது. பயிற்சி முகாமிற்கு ஆடுதுறை தமிழ்நாடு நெல்ஆராய்ச்சி நிலைய இயக்குனர் முனைவர் ஜெயராஜ் தலைமை வகித்தார். மேலும் அவர், இலை வழி உரம் மற்றும் விதைப்பயிர் அறுவடை தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளித்தார். பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்துறை பேராசிரியர் முØ னவர் வைத்திலிங்கம் விதைப்பயிரில் கலவன் அகற்றுதல் குறித்து விளக்கி பேசினார். பூச்சியியல் துறை பேராசிரியர் முனைவர் சோழன், பூக்கும் மற்றும் காய்ப்பிடிப்பு த ருணங்களில் விதைப்பயிரிØ ன தாக்கும் பூச்சிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விளக்கமளித்தார். இப்பயிற்சியில் 30 முன்னோடி விவசாயிகள் மற்றும் பருத்திக்கோட்டை உதவி வேளாண் அலுவலர் அசோகன் ஆகியோர் கலந்துகொண்டு பயனடைந்தனர். விதை நுட்பவியல் உதவிப்பேராசிரியர் முனைவர் ராஜா அனைவரையும் வரவேற்றார். வயல்வெளி உதவியாளர் ராஜாமணி நன்றி கூறினார்.

**மா அடர்நடவு செய்தால் 75 சதவீத மானியம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,02:08 IST

கொட்டாம்பட்டி:""கொட்டாம்பட்டி வட்டாரத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் மா அடர் நடவு செய்யும் விவசாயிகளுக்கு 75 சதவீத மானியம் வழங்கப் படும்," என, தோட்டக்கலை உதவி இயக்குனர் வெங்கடேஸ்வரி தெரிவித்துள்ளார். அவர் கூறியுள்ளதாவது: இத்திட்டத்தில் ஏக்கர் ஒன்றுக்கு 160 மா ஒட்டுக் கன்றுகள், உரங்கள் மற்றும் பயிர்பாதுகாப்பு மருந்துகள் 75 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது. சொட்டுநீர் பாசன வசதியும் செய்து தரப்படும். பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரை அல்லது தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம், என கூறியுள்ளார்.

**வெப்பமயமாதலை தடுக்கஐந்து லட்சம் மரக்கன்றுகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,02:08 IST

மதுரை:""இந்தாண்டு புவிவெப்பமயமாதலை தடுக்க தமிழகத்தில் ஒரே நாளில் ஐந்து லட்சம் மரக்கன்றுகள் நடப்படும்," என, லயன்ஸ் கிளப் உலக துணைத் தலைவர் வென்மேடன் பேசினார். மதுரை சிங்கராயர் காலனி ஆண்ட்ரூஸ் ஆஸ்பத்திரியில், கிளப் சார்பில் மாவட்ட ஆளுநர் நந்தகுமார் தலைமையில், இலவச புற்றுநோய் கண்டுபிடிப்பு மற்றும் தடுப்பு மைய திறப்பு விழா நடந்தது. அகில உலக துணைத் தலைவர் வென்மேடன் திறந்து பேசுகையில், ""கண்ணொளி திட்டத்திற்கு கிளப், 144 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியது. மாலைக்கண் நோய் தற்போது லத்தீன் அமெரிக்க நாடுகளில் முழுமையாக ஒழிக்கப்பட்டது. ஆறு மில்லியன் பேருக்கு கண்புரை ஆபரேஷன் நடத்தி உள்ளோம். இந்தாண்டு வெப்பமயமாதலை தடுக்க, ஆக. 25 முதல் உலகம் முழுவதும் மரக்கன்றுகளை நட உள்ளோம். சென்னையில் கிளப் தலைவர் வின்குன்டாம் இதை துவக்குகிறார், என்றார். கூட்டு மாவட்ட தலைவர் சம்பத், முன் னாள் பன்னாட்டு இயக்குனர் ராமசாமி, துணை ஆளுநர்கள் முருகேசன், முத்து ராமலிங்கம், பி.ஆர்.ஓ., நெல்லை பாலு, செயலாளர் பிரசன்னகுமார், மாநாட்டு செயலாளர் ரகுவரன் பங்கேற்றனர்.

**வேளாண்மையில் நவீன லேசர் கருவிமாவட்டத்தில் முதல்முறையாக அறிமுகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,02:04 IST

திருப்பரங்குன்றம்:திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் சின்ன உடைப்பு கிராமத்தில், நிலத்தை சமப்படுத்தும் நவீன லேசர் கருவி மற்றும் வேளாண் கருவிகளின் பயன்பாடுகள் குறித்த செயல் விளக்கம் நடந்தது.வேளாண்மை பொறியியல் துறை சார்பில், வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில் நிலத்தை சீரமைக்கும் லேசர் கருவி, களை எடுக்கும், மரம் வெட்டும், மரக்கிளைகளை கழிக்கும் கருவிகள், தெளிப்பான்கள் ஆகியவற்றை பயன்படுத்துதல் குறித்த செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. மதுரை வேளாண்மை இணை இயக்குனர் சங்கரலிங்கம், மண்டல கண்காணிப்பு பொறியாளர் தெய்வேந்திரன், கோட்ட செயற் பொறியாளர் ஆரோக்கியசாமி, உபகோட்ட உதவி செயற் பொறியாளர் பெரியசாமி, வேளாண்மை துணை இயக்குனர் சம்பத்குமார், உதவி இயக்குனர் செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உதவி செயற்பொறியாளர் பெரியசாமி கூறுகையில், ""பழைய முறைப்படி விவசாய நிலங்களில் தொழி அடிப்பதால், நிலம் சமம் இல்லாத நிலை காணப்படும். இதனால் பயிர்களுக்கு சீரான தண்ணீர், உரச்சத்து கிடைக்காமல் விளைச்சல் பாதிக்கும். இதை தவிர்க்க 3.25 லட்சம் ரூபாயில் நவீன லேசர் கருவி வாங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நிலங்களை சமப்படுத்தினால், அனைத்து பகுதிகளுக்கும் சமமான அளவில் தண்ணீர் கிடைப்பதுடன், தண்ணீர் சேமிக்கப்படும். பயிர் நன்றாக வளர்ந்த அதிக விளைச்சல் கொடுக்கும். உரச் செலவும் குறைவு. இக்கருவி மதுரை மாவட்டத்தில் முதல்முறையாக இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. என்றார்.

**மண் புழுக்கள், உரங்களை வாங்குவதற்கு விவசாயிகளிடம் தயக்கம் நிலவுகிறது: பேராசிரியர் பேச்சு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,01:27 IST

திண்டிவனம் : விவசாயிகள் மண் புழுக்கள் மற்றும் உரங்களை விலை கொடுத்து வாங்க தயக்கம் காட்டி வருவதாக பேராசிரியர் ராமமூர்த்தி தெரிவித்தார்.மண்புழு உரம் தயாரித்தல் பற்றி வேளாண்மை உதவி இயக்குனர்களுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் திண் டிவனத்தில் நடந்தது. திருவண் ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த உதவி வேளாண்மை இயக்குனர்களுக்கு சில்பாலின் பைகளில் மண்புழு உரம் தயாரித்தல் தொடர்பான ஒரு நாள் முகாம் நடந் தது. திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த முகாமில் தயாரிப்பு செயல் விளக்கமும், பயிற்சி வகுப்பும் நடந்தது. முகாமில் திட்ட விஞ்ஞானி முனைவர் அன்புமணி செயல்முறை விளக்கம் அளித்தார். உலக வங்கியின் நிதி உதவியுடன் நடைபெறும் நிலவள நீர் வள திட்டம் குறித்து ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் ராமமூர்த்தி விளக்கினார்.

முகாமில் பேராசிரியர் ராமமூர்த்தி பேசியதாவது: இந்த திட்டம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்டது. விவசாயிகள் மண் புழுக்கள் மற்றும் உரங்களை விலை கொடுத்து வாங்க தயக்கம் காட்டி வருகின்றனர். அதனால் வேளாண்மை உதவி இயக்குனர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது.இதன் மூலம் விவசாயிகளுக்கு முழு விளக்கமும், செயல் முறையும் செய்து காட்டி, தயாரிப்பதற்கு ஊக்கம் அளிக்கப்படும். சிறிய முதலீட்டில் தங்களுடைய நிலத்திற்கு தேவையான அளவு உரத்தை தயாரித்துக் கொள்ள முடியும். வியாபார நோக்கத்திலும் அதிக பயன் பெற முடியும். ஒரு டன் கால்நடை கழிவுகள், தழைகள் ஆகியவற்றிலிருந்து 600 கிலோ மண்புழு உரம் கிடைக்கும். ஒரு டன் கழிவுப் பொருட்களுக்கு ஒரு கிலோ மண் புழு மட்டும் போதுமானது. இந்த முறையில் 45 நாட்களில் பல கிலோ மண் புழு உற்பத்தியாகும். மண்புழு ஒரு கிலோ 300 ரூபாய்க்கு விற்று லாபம் பெறலாம். இதற்கு மொத்தம் 800 ரூபாய்தான் செலவு ஏற்படும்.

**வெண்டை பயிரிடுவதால் தியாகதுருகம் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,01:23 IST

தியாகதுருகம் : உபரி வருவாய் ஈட்டும் வகையில் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் வெண்டை சாகுபடி செய்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.தியாகதுருகம் பகுதியில் சில விவசாயிகள் காய்கறி சாகுபடி செய்து லாபம் ஈட்டி வருகின்றனர். பருவத்திற்கு ஏற்ற காய்கறிகளை பயிரிடுவதால் கூடுதல் மகசூல் கிடைத்து வருகிறது. கரும்பு பயிரிடுவதில் பெரும்பாலான விவசாயிகள் கவனம் செலுத்தி வருவதால் காய்கறி சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது.இப்பகுதியில் நல்ல மண் வளம் இருப்பதால் திட்டமிட்டு செய்யப்படும் காய்கறி சாகுபடி மூலம் நல்ல வருவாய் ஈட்ட வாய்ப்புள்ளது. இருந்தும் உபரி வருவாய் ஈட்டும் வகையில் குறுகிய பரப்பில் மட்டுமே இதனை பயிரிட்டு வருகின்றனர். காய்கறிகளில் கத்திரி, வெண்டை, மிளகாய், தக்காளி, புடலை, பீர்க்கன், பாகற்காய் போன்றவைகள் விரும்பி பயிரிடப்படுகிறது.

தற்போது வெண்டைக்காய் சாகுபடி பருவம் என்பதால் சில விவசாயிகள் இதை பயிரிட்டுள்ளனர். அளவான மழையால் நன்கு செழித்து வளர்ந்து அதிகளவில் காய்கள் காய்த்துள்ளது. மூன்று மாதங்களில் நிகர லாபம் ஈட்டித்தரும் வெண்டை சாகுபடியில் உள்ள ஒரே பிரச்னை இதை அறுவடை செய்வதாகும். செடி மற்றும் காய்களில் சிறிய முள்போன்று உள்ளதால், இது உடலில் பட்டால் அரிப்பை ஏற்படுத்தி எரிச்சலை உண்டாக்கும். இதனை அறுவடை செய்வதற்கு

கூலியாட்கள் வர தயக்கம் காட்டுவதால் சாகுபடி செய்யும் விவசாயிகளே தங்கள் குடும்பத்தினருடன் சேர்ந்து அறுவடை செய்து விற்பனை செய்கின்றனர்.

குறுகிய பரப்பில் பயிரிடப்படுவதால் மொத்தமாக விற்பனை செய்வதில்லை. விவசாயிகள் நேரடியாக சந்தை மற்றும் தெருக்களுக்கு எடுத்து சென்று விற்பனை செய்வதன் மூலம் முழு லாபத்தையும் பெறுகின்றனர். தற்போது வெண்டைக்காய் கிலோ 14 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கால் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள வெண்டை செடியில் இருந்து மூன்று தினங்களுக்கு ஒருமுறை 50 கிலோ மகசூல் கிடைக்கிறது.இதன் மூலம் வாரத்திற்கு 2,000 ரூபாய் வரை விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்கிறது. அறுவடை செய்வது சற்று சிரமமான சாகுபடி பயிராக இருந்தாலும் நிகர லாபம் கிடைப்பதால் தியாகதுருகம் பகுதி விவசாயிகள் ஆர்வமுடன் வெண்டை சாகுபடி செய்து லாபம் ஈட்டி வருகின்றனர்.

**சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம் சிறந்த அறிவியல் நிலையமாக தேர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,04:12 IST

பனமரத்துப்பட்டி : சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம், தமிழகத்தில் சிறந்த அறிவியல் நிலையமாக தேர்வு செய்யப்பட்டு, மாநில அரசு விருது வழங்கியுள்ளது.தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழத்தின் கட்டுப்பாட்டில், சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம் செயல்பட்டு வருகிறது. 2010ம் ஆண்டில், தமிழகத்தில் சிறந்த அறிவியல் நிலையமாக சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம் தேர்வு செய்யப்பட்டது.தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின், 41வது நிறுவன தின விழாவில், தமிழக வேளாண் அமைச்சர் செங்கோட்டையன், திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கத்திடம் விருது வழங்கினார். வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் கீதாவுக்கு, சிறந்த வேளாண் விரிவாக்க பணிக்கான விருது வழங்கப்பட்டது.வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் கூறியதாவது:சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், விவசாயிகளுக்கு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சிகள், பூச்சி நோய் நிர்வாகம், நீர் மேலாண்மை, வேளாண் பொறியியல், மல்பெரி வளர்த்தல், காளான் வளர்ப்பு, மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல், சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

மாவு பூச்சியை கட்டுப்படுத்த, அசிரோபேகஸ் ஒட்டுண்ணி உற்பத்தி செய்யப்பட்டு, துணை வேந்தர் முருகேச பூபதி வழங்கினார். சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில், மாவு பூச்சியை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி உற்பத்தி செய்து, 24 ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு இலவசமாக

வழங்கப்பட்டு, 250 ஹெக்டேர் பரப்பளவு நிலத்தில் விடப்பட்டுள்ளது.வேளாண் அறிவியல் நிலையத்தில், மொபைல் ஃபோன் மூலம் குறுந்தகவல் அனுப்பப்படுகிறது. சந்தை நிலவரம் கேட்டு பதிவு செய்துள்ள, 750 விவசாயிகளுக்கு நாள்தோறும் தகவல் அனுப்பப்பட்டு வருகிறது. தமிகத்தில் சிறந்த அறிவியல் நிலையமாக சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையம் தேர்வு செய்து, மாநில அரசு விருது வழங்கியுள்ளது.

**கரும்பு சாகுபடி கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,00:38 IST

தர்மபுரி: பாலக்கோடு சர்க்கரை ஆலை சார்பில், சொட்டு நீர் பாசனம் மற்றும் செம்மை கரும்பு சாகுபடி குறித்த கருத்தரங்கம் தர்மபுரி அடுத்த கிருஷ்ணாபுரத்தில் நடந்தது. சர்க்கரை ஆலையின் தனி அலுவலர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் சின்னசாமி முன்னிலை வகித்தார். ஜெயின் இர்ரிகேசன் நிறுவனத்தின் உழவியல் நிபுணர் திருச்செல்வம் கரும்பில் சொட்டு நீர் பாசனம் பயன்படுத்தும் முறை குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தார். சொட்டு நீர் கரும்பு சாகுபடியில் பயன்படுத்தப்பட்டால் 50 சதம் தண்ணீர் சேமிப்பு ஏற்படுகிறது. இதன் மூலம் உரம் வீணாகாமல் பயிருக்கு கிடைத்து அதிக மகசூல் பெற முடியும் என்பது குறித்து கருத்தரங்கில் செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. செம்மை கரும்பு சாகுபடி குறித்து தனி அலுவலர் கோவிந்தராஜ், கரும்பு அலுவலர் தாமோதிரன் ஆகியோர் பேசினர். தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சக்திவேல், செங்கோடன், பழனி. வெங்கடேசன், ஆறுமுகம், வெங்கட்ராமன், முருகேசன், விமல் உட்பட 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர். தர்மபுரி கோட்ட கரும்பு அலுவலர் வேணுகோபால் மற்றும் கரும்பு உதவியாளர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். கரும்பு தவியாளர் கண்ணன் நன்றி கூறினார்.

**உர மேலாண்மையை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெற அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,00:29 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நடப்பு கார் மற்றும் முன் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் நேரடி உரங்கள் மற்றும் கூட்டு உரங்களை பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெறலாம், என்று வேளாண் இணை இயக்குனர் நாச்சியப்பன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கார் மற்றும் முன் சம்பா பருவத்தில், 9,000

முதல் 10 ஆயிரம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கே.ஆர்.பி., அணை பாசன பகுதிகள் மற்றும் பாரூர் ஏரி பாசன பகுதிகளில், நடவு பணி தீவிரமாக நடந்து வருகிறது. நெல் நடவின் போது நெல் பயிருக்கு மண் ஆய்வு முடிவு மண் வள அட்டை பரிந்துரை படி உரமிடவேண்டும். இதனால் உரச்செலவினங்கள் குறைவதுடன் தேவையற்ற கூடுதல் உரச்செலவினத்தையும் தவிர்க்கலாம். மண் ஆய்வு மேற்கொள்ளப்படாத பட்சத்தில் பொது பரிந்துரையாக ஏக்கருக்கு, 60 சதவீத தழை, 20 சதவீத மணி, 20 சதவீத சாம்பல் சத்து தரவல்ல நேரடி உரங்களை இடுதல் அவசியமாகும். மேலும், நெல் பயிருக்கு உரத்தினை பிரித்து இடுவதால் உரங்கள் விரயம் ஆவது தவிர்க்கப்படுகிறது. இதன் படி அடிஉரமாக 30 சதவீத தழை, 20 சதவீத மணி, 10 சதவீத சாம்பல் சத்து உரங்களை இடவேண்டும். நடவு நட்டு 21வது நாளில் 10 சதவீத தழை, 5 சதவீத சாம்பல் சத்து உள்ள உரங்களை இடவேண்டும். இதே போல் கதிர் உருவாகும் பருவத்திலும், பூ பூக்கும் பருவத்திலும் 10 சதவீத தழை, 5 சதவீத சாம்பல் சத்து தரவல்ல உரங்களை இடவேண்டும். இவ்வாறு நெல் பயிருக்கு உரங்களை பிரித்து இடுவதன் மூலம் பருவத்திற்கு ஏற்ப உரச்சத்து பயிருக்கு கிடைக்க வாய்ப்புள்ளது. இதன் மூலம் தேவைக்கு மேல் உரத்தினை விரயம் ஆவதை தடுக்கலாம். மேலும், ஏக்கருக்கு நேரடி உரங்களை நெல் பயிருக்கு இடும்போது பொது சிபாரிசுபடி யூரியா 132 கிலோ, இவற்றில் அடி உரமாக 66 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 125 கிலோவும், பொட்டாஷ் 33 கிலோவில் 17 கிலோ அடிஉரமாகவும் இடவேண்டும். நேரடி உரங்கள் பயன்படுத்தாத போது ஏக்கருக்கு கூட்டு உரம் பயன்படுத்தும் பட்சத்தில் பொது சிபாரிசாக 100 கிலோ கூட்டு உரத்துடன் 97 யூரியா இட வேண்டும். இதில் அடி உரமாக ஏக்கருக்கு 100 கிலோ கூட்டு உரமும் 31 கிலோ யூரியாவும் இடவேண்டும். கூட்டு உரம் பயன்படுத்தும் போது, பொது சிபாரிசாக 100 கிலோவுடன் 88 கிலோ யூரியாவை சேர்த்து பயன்படுத்த வேண்டும். இதில் அடி உரமாக ஏக்கருக்கு 100 கிலோ கூட்டு உரத்துடன் 22 கிலோ யூரியாவை கலந்து இடவேண்டும். டி.ஏ.பி., கூட்டு உரத்தினை பயன்படுத்தும் போது ஏக்கருக்கு பொது சிபாரிசாக 43 கிலோவுடன் 114 கிலோ யூரியாவை சேர்த்து இட வேண்டும். இதில் அடி உரமாக ஏக்கருக்கு 43 கிலோ டி.ஏ.பி., கூட்டு உரத்துடன் 26 கிலோ யூரியாவை இட வேண்டும். கூட்டு உரத்துடன் ஏக்கருக்கு 17 கிலோ பொட்டாஷ் உரத்தினை அடி உரமாக சேர்த்து இட வேண்டும் எனவே, கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் நெல் பயிருக்கு நேரடி உரங்களான யூரியா , சூப்பர் பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களை பயன்படுத்துவது நல்லது. நேரடி உரங்கள் பயன்படுத்தாத போது கூட்டு உரங்களை பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறலாம். மேலும் விவரங்களை விவசாயிகள் அருகில் உள்ள வேளாண் துறை அலுவலர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம்.

**விவசாயிகளுக்கு திருந்திய நெற்பயிர் சாகுபடி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,01:46 IST

திருவள்ளூர் : திரூர் வேளாண் அறிவியல் மையத்தில், விவசாயிகளுக்கு திருந்திய நெல் பயிர் சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது.திருவள்ளூர் மாவட்டம், திரூர் கிராமத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில், வேளாண் அறிவியல் நிலையம் செயல்படுகிறது. இங்கு, உலக வங்கியின் நிதி உதவியுடன் நீர்வள, நிலவளத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் ஒரு பகுதியான, ஆரணியார் உபவடிவ பாசன திட்டத்தில், விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது.வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைவர் தேவநாதன் மற்றும் தோட்டக்கலைத் துறை உதவிப் பேராசிரியர் முத்துராமலிங்கம் ஆகியோர் இதில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.திருந்திய நெல் சாகுபடி மற்றும் துல்லிய பண்ணையில் வாழை மற்றும் காய்கறிகள் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு நிலைய பயிற்சி அளிக்கப்பட்டது.கும்மிடிப்பூண்டி அடுத்த ஆர்.என்.கண்டிகை கிராமத்தைச் சேர்ந்த, 70க்கும் மேற்பட்ட விவசாயிகள் இப்பயிற்சியில் பங்கேற்றனர்.

**வீராணம் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது எப்போது : தள்ளிப் போவதால் விவசாயிகள் புலம்பல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,01:10 IST

சிதம்பரம் : வீராணம் ஏரியில் இருந்து சென்னைக்கு தண்ணீர் அனுப்புவதில் துவங்கி, தற்போது பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது வரை அமைச்சர்களின் தேதி கிடைக்காததால் தண்ணீர் திறப்பு தொடர்ந்து தள்ளிப்போகிறது. இதனால் விவசாயிகள் சம்பா சாகுபடியை துவக்க முடியாமல் உள்ளனர்.காவிரி டெல்டா கடைமடை பாசனத்திற்கு ஜூன் 12ம் தேதி மேட்டூரில் இருந்து தண்ணீர் திறப்பது வழக்கம். கடந்த 8 ஆண்டுகளாக பருவ மழை பொய்த்ததால் தண்ணீர் திறப்பு காலதாமதமாகியது. ஆனால் இந்த ஆண்டு இதுவரை இல்லாத அளவில் ஜூன் 12ம் தேதிக்கும் முன்பாக 6ம் தேதியே டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது.கல்லணைக்கு வந்த தண்ணீர் கீழணையில் தேக்கப்பட்டு கடந்த மாதம் 29ம் வீராணத்திற்கு திறந்து விடப்பட்டது. விராணம் நிரம்பியதையொட்டி கடந்த 12 ஆண்டுகளில் ஜூலை மாதம் வீராணத்தில் இருந்து சம்பா சாகுபடிக்கு முன்கூட்டியே தண்ணீர் திறக்கப்படுகிறது என்பதால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.ஆனால் வீராணம் பாதியளவு நிரம்பியதுமே கடந்த ஜூலை 10ம் தேதி அவசர, அவசரமாக சென்னைக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பணி துவங்கியது.

**மூலிகை தொழிற்பயிற்சி கடலூரில் 5ம் தேதி துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 01,2011,01:11 IST

கடலூர் : கடலூரில், மூலிகை தொழிற்பயிற்சி வரும் 5ம் தேதி துவங்குகிறது.இதுகுறித்து தி சுசான்லி அக்குபஞ்சர் அண்டு ஆயுர்வேதிக் மருத்துவமனை இயக்குனர் ரவி வெளியிட்டுள்ள அறிக்கை:கடலூரில் மத்திய அரசின் அமைப்பு சார்பில் மூலிகை தொழிற்பயிற்சி வரும் 5ம் தேதி முதல் 8ம் தேதி வரை நான்கு நாட்கள் நடக்கிறது.மூலிகை என்றால் என்ன, மூலிகைகளை கொண்டு நோய்களை குணப்படுத்துவது எப்படி, மருந்து தயாரிக்கும் முறை குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது.60க்கும் மேற்பட்ட நோய்களுக்கான மருந்துகள், சூரணங்கள், லேகியம் தயாரிக்கும் முறை பற்றியும் பயிற்சி அளிக்கப்படும்.மத்திய அரசு வழங்கும் இப்பயிற்சி சான்றிதழ் மூலமாக 25 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை மானியத்துடன் கூடிய கடனுதவி பெறலாம்.பயிற்சியில் பங்கேற்க 20 பேருக்கு மட்டுமே அனுமதி உண்டு. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**சாமை சாகுபடி குறித்த தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2011,00:54 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் மானாவாரி நிலங்களில் சாமை பயிர் செய்ய வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் வெளியிட்ட அறிக்கை:மானாவாரிக்கேற்ற மகத்தான பயிரான சாமை குறுகிய காலத்தில், குறைவான இடு பொருள் செல்வில் மிகுந்த லாபத்துக்கு ஏற்ற பயிராகும். இப்பயிருக்கான உற்பத்தி தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து நடப்பு ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்தால் அதிக லாபம் பெறலாம்.விவசாயிகள் இப்பருவத்துக்கு ஏற்ற வறட்சியை தாங்கி வளர்ந்து உயர் விளைச்சலை தரக்கூடிய சாமை ரகங்களான கோ 3, கோ (சாமை) 4, பையூர் 2 மற்றும் கோ 1 ஆகியவற்றை சாகுபடி செய்ய வேண்டும்.சாமை பொதுவாக கை விதைப்பு மூலம் செய்வதற்கு ஏக்கருக்கு ஐந்து கிலோ விதை போதுமானது. பயிரின் வளர்ச்சி ஒரே சீராக இருக்க விதைப்பான் கொண்டு வரிசை விதைப்பு செய்தால்,ல அதிக பரப்பில் மண் ஈரம் காயும் முன்பே விதைக்கலாம்.விதைகளை 25 செ.மீ., ஆழத்தில், வரிசைக்கு வரிசை 22,5 செ.மீ., இளைவெளியும், பயிருக்கு பயிர் 7.5 செ.மீ., இளைவெளியும் இருக்குமாறு விதைப்பு செய்ய வேண்டும். சாமை விதையின் அளவு மிக சிறியதாக இருப்பதால் அது முளைத்துவர ஐந்து முதல் ஏழு நாட்கள் ஆகும்.விதைக்கும் முன்னர் சாமை விதைகளை ஒரு லிட்டர் தண்ணீரில் 100 மில்லி இளநீர் அதாவது 10 சதவீத இளநீர் கரைசலில் ஆறு மணி நேரம் ஊற வைத்து பின்னர் விதைப்பு

செய்வதால், இளநீரில் உள்ள பொட்டாஷ் சத்தின் கராணமாக வறட்சியை தாங்கி வளர்ந்து நல்ல மகசூலை கொடுக்கும்.விதைகளை அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா உயிர் உர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். பொதுவாக விவசாயிகள் மானாவாரி பயிர்களுக்கு உரமிடுவதில்லை. இதனால், பயிர்களுக்கு போதிய சத்துக்கள் பற்றாக்குறையால் விளைச்சல் வெகுவாக பாதிபக்கப்படுகிறது.பயிருக்கு மண் பரிசோதனைப்படி உரமிட வேண்டும். மண் பரிசோதனை செய்யாவிடில், பொதுப்பரிந்துரையான ஏக்கருக்கு ஐந்து டன் மக்கிய தொழு எரு 16 கிலோ தழைச்சத்து தரவல்ல 35 கிலோ யூரியா, எட்டு கிலோ மணிசத்து தரவல்ல 50 கிலோ சூப்டர் பாஸ்பேட் மற்றும் எட்டு கிலோ சாம்பல் சத்து தரவல்ல 14 கிலோ பெட்டாஷ் உரங்களை இட வேண்டும்.சாமை பயிரை அதிக பூச்சி நோய்கள் தாக்குவதில்லை. ஒரு சில இடங்களில் குருத்து ஈ தாக்கி விளைச்சலை பாதிக்கும். இப்பூச்சிகளை கட்டுப்படுத்த விதைப்பை தள்ளி போடது பருமழை துவங்கிய உடன் விதைப்புடு செய்ய வேண்டும்.சாமை கதிர்கள் நன்று முற்றி காய்ந்த பின் அறுவடை செய்து, தானியங்களை பிரித்தெடுத்து சுத்தம் செய்து காய வைத்து சேமிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 600 முதல் 800 கிலோ தானிய விளைச்சல் கிடைக்கும். சாமையில் உய்ய சத்துக்கள் பற்றிய மக்களிடையே நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதாலும், உணவு பொருட்கள் மற்றும் பிஸ்கட் போன்ற பொருட்கள் தயார் செய்ய மூலப்பொருளாக விளங்குவதால் சாமையின் தேவை அதிகரித்துள்ளது.வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. விவசாயிகள் தொழில் நுட்பங்களை கடைப்பிடித்து சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்று பயன் அடையலாம்.

**தேங்காய் பருப்பு விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2011,01:40 IST

கோபிசெட்டிபாளையம்: எண்ணெய் விலை உயர்வு காரணமாக, தேங்காய் பருப்பு விலை தொடர்ந்து உயர்வதால், உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தமிழக அரசு சமீபத்தில், "வாட்' வரியை உயர்த்தியது. எண்ணெய் பொருட்களுக்கான, "வாட்' வரி நான்கு சதவீத்தில் இருந்து ஐந்து சதவீதமாக உயர்ந்தது. இதன் எதிரொலியாக எண்ணெய் விலை லிட்டருக்கு 10 ரூபாய் உயர்ந்துள்ளது.கேரளாவில் ஓணம் பண்டிகை நெருங்குவதால், தமிழகத்தில் இருந்து எண்ணெய் அனுப்புவது அதிகரித்துள்ளது. தேங்காய் எண்ணெய் தேவை அதிகரிப்பு காரணமாக இரு வாரமாக கொப்பரை தேங்காய் விலை உயர்ந்து வருகிறது. ஆடி மாதத்தில் பெய்யும் சாரல் மழையால் தேங்காய் பருப்பை காய வைக்க முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர்.கொப்பரை விலை சென்ற வாரம் கிலோவுக்கு 5.50 ரூபாய் வரை உயர்ந்தது. நடப்பு

வாரம் மேலும் கிலோவுக்கு மூன்று ரூபாய் உயர்ந்துள்ளது.கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு நடப்பு வாரம் 303 மூட்டை கொப்பரை வரத்தானது. கிலோ 61.17 முதல் 63.63 ரூபாய் வரை விற்கப்பட்டது.சென்ற இரு வாரமாக கொப்பரை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் கொப்பரை வரத்து அதிகரித்துள்ளது.

**நெல் விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2011,23:16 IST

மடத்துக்குளம் : குறுவை நெல் சாகுபடியில் திருத்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை பின்பற்றினால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என மடத்துக்குளம் வட்டார வேளாண் துறை அறிவுறுத்துள்ளது. வேளாண்மைத்துறையினர் கூறியதாவது : வழக்கமான நெல் சாகுபடி முறையை விட திருத்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தால் அதிக மகசூல் கிடைத்து வருவது அனுபவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நாற்றங்கால் அமைக்கும் போது மேட்டு பாத்தி முறையில் நாற்றங்கால்கள் அமைக்க வேண்டும். ஒரு எக்டேருக்கு 3 சென்ட் அளவில் நாற்றங்கால் அமைத்தால் போதுமானது. நடவு செய்யும் போது செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை பயன்படுத்தி, ஒன்றை நாற்று நடவு முறையில் நடவு செய்ய வேண்டும். நாற்றுக்கு, நாற்று 25 செ.மீ., என்ற அளவில் நடவு செய்ய வேண்டும். களை எடுக்கும் போது "கோனோவீட்டர்' இயந்திரம் மூலம் களை அனைத்தும் உரமாக மாற்றப்படுகிறது. இதனால், களை எடுக்கும் செலவு இல்லாததோடு, உரத்திற்கான செலவு பாதியாக குறைகிறது. மேலும், வரிசைக்கு ஒரு நாற்று என்ற அடிப்படையில் நடப்படுவதால், இடைவெளி அதிகரித்து, நெல் நாற்றில் அதிகளவு தூர் மற்றும் வேர் பரவுகிறது. இதனால், வழக்கமான நடவு முறையில் கிடைக்கும் மகசூலை விட 25 முதல் 50 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது. இந்த முறையில் தண்ணீர் குறைவாகவே தேவைப்படுகிறது. வழக்கமான நடவு முறையில் விதைப்பு முதல் அறுவடை வரை எக்டேருக்கு 1200 மி.மீ., தண்ணீர் தேவை உள்ளது. செம்மை நெல் சாகுபடி முறையில் 600 மி.மீ., தண்ணீர் இருந்தால் போதுமானது, என்றனர்.

**பட்டு விவசாயிகளுக்கு மானிய அறிவிப்பு: சட்டசபை கூட்டத்தொடரில் வெளியாகும்?**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2011,22:46 IST

உடுமலை : "பட்டு வளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்துவதற்காக, ரூ.31 கோடி அளவுக்கு திட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளன," என்று உடுமலையில் நடந்த

கருத்தரங்கில், அமைச்சர் சண்முகவேலு பேசினார். பட்டு விவசாயிகள் கலந்துரையாடல் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நேற்று உடுமலை ஜி.வி.ஜி., கலையரங்கத்தில் நடந்தது. மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை வகித்தார். ஊரக தொழில்துறை அமைச்சர் சண்முகவேலு பேசியதாவது: ஒரு ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்வதற்கு 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாயும்; தரமான மல்பெரி நாற்றுகளை நடவு செய்ய ஏக்கருக்கு 4,125 ரூபாயும் மானியமாகவும், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து வழங்குகின்றன. மல்பெரித் தோட்டங்களில், சொட்டுநீர் பாசன அமைப்பு நிறுவுவதற்கு 75 சதவீத மானியமாக ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. தேர்தல் அறிக்கையில், கூறியது போன்று, 100 சதவீத மானியம் வழங்குவதற்கான அறிவிப்பு, சட்டசபை கூட்டத்தில் முதல்வர் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. உடுமலை, கோவை, கோபிச் செட்டிபாளையம் பகுதி விவசாயிகள் பட்டுதொழிலில் முன்னுதாரணமாக விளங்குகின்றனர். இப்பகுதி விவசாயிகள் நடைமுறைப்படுத்தும் நவீன பட்டுத்தொழில்நுட்பங்களை நேரில் கண்டு தமது பகுதியில் செயல்படுத்துவதற்காக தமிழகத்தின் பிற பகுதியிலிருந்து பட்டு விவசாயிகள் வருகின்றனர். கர்நாடகா, ஆந்திரா மாநில துறை உயர் அலுவலர்கள், விவசாயிகளும் உடுமலை, பொள்ளாச்சி, கோபிக்கு பயிற்சி பெற வருகின்றனர். நடப்பாண்டில், தமிழகத்தில் பட்டுவளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்தவும், விவசாயிகள், பட்டுநூற்பாளர்கள், நெசவாளர்களுக்கு மானிய உதவிகள் வழங்கவும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் ரூ. 31 கோடி அளவுக்கு திட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளை பயன்படுத்தி தமிழகத்தை பட்டு உற்பத்தியில் முதல் மாநிலமாக செய்வதற்கு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.இவ்வாறு அமைச்சர் பேசினார்.கூட்டத்தில் உடுமலை எம்.எல்.ஏ., பொள்ளாச்சி ஜெயராமன், பட்டுவளர்ச்சித்துறை அதிகாரிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

**திராட்சையில் "மாவுபூச்சி' மருந்து இல்லாத அவலம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2011,23:17 IST

கம்பம் : திராட்சையில் "மாவுப்பூச்சி' தாக்குதலை கட்டுப்படுத்த மருந்துகள் இல்லாத அவல நிலை தொடர்கிறது. கம்பம் பகுதியில் வாழை, திராட்சை, பப்பாளி, கொய்யா உள்ளிட்ட பல்வேறு தோட்டக்கலை பயிர்கள் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பயிர்களை தாக்கும் மாவு பூச்சியை கட்டுப்படுத்த இது வரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. திராட்சை விவசாயிகள் சங்க பொருளாளர் இருளாண்டி கூறுகையில்,"திராட்சையில் மாவு பூச்சி தாக்குதலை

கட்டுப்படுத்த பூச்சி மருந்துகள் அடித்தும் பலன் இல்லை, மழை பெய்து வருவதால்கட்டுக்குள் உள்ளது' என்றார்.

தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: திராட்சை, கொய்யா, பப்பாளி போன்ற பயிர்களில் மாவு பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ஆராய்ச்சி நடக்கிறது. இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. சமீபத்தில் ஒட்டுண்ணி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் பிரிவை தொடர்பு கொண்டால், அது கிடைக்கும்.ஒட்டுண்ணியை பயன்படுத்தி மாவு பூச்சியை கட்டுப்படுத்தலாம்' என்றார்.

**நெல் விலை தொடர்ந்து சரிவு : கம்பம் விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2011,23:13 IST

கம்பம் : நெல் விலை குறைந்து வருவதால், அதிருப்பதியில் உள்ள கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள், நெல் சாகுபடியை மறுபரிசீலனை செய்யும் முடிவில் உள்ளனர். பெரியாறு பாசனத்தால், தேனி மாவட்டம் கூடலூரில் துவங்கி தேனி பழனிசெட்டிபட்டி வரை, 14 ஆயிரத்து 707 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஹெக்டேருக்கு 8 டன் வரை மகசூல் கிடைக்கிறது. விலை கிடைக்காததும், செலவுகள் பல மடங்கு அதிகரித்துள்ளதும் நெல் விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது.இதனால், சாகுபடியை மாற்றும் முடிவில் உள்ளனர்.

கம்பம் நீரினை பாய்ச்சுவோர் சங்க நிர்வாகி ராமகிருஷ்ணன் கூறியதாவது: ஒரு ஏக்கருக்கு நாற்றங்கால் பராமரிக்க ரூ.600, விதை நெல் கிலோ ரூ.220 வீதம், 7 கிலோவிற்கு ரூ.1,540, விதை நெல் பாவுதலுக்கு ரூ. 300, வரப்பு வெட்ட கூலி ரூ. 650, தரிசு உழவு மற்றும் நடவு ரூ.1,800, பரம்பு அடிக்க ரூ.400, நடவு ஆட்களுக்கு கூலி ரூ.1,600, உரம் ரூ. 2,400, எலி பிடிக்க ரூ.500, இரண்டு முறை களையெடுக்க ரூ.2,000, மருந்து அடிக்க ரூ.500, அறுவடைக்கு ரூ.2,000 உட்பட ஏக்கருக்கு 15 ஆயிரம் வரை செலவாகிறது. ஒரு ஏக்கரில் 50 மூடை கிடைக்கும். மூடை விலை தற்போது 450 ல் இருந்து 500 ரூபாய் வரை உள்ளது. 50 மூடைக்கும் ரூ.25 ஆயிரம் கிடைக்கிறது. செலவு ரூ.15 ஆயிரம் போக, மிஞ்சுவது ரூ.10 ஆயிரம். அதுவும் குத்தகை நிலம் என்றால், நில உரிமையாளருக்கு கொடுத்து விட்டு, விவசாயி வெறுங்கையுடன் செல்ல வேண்டும்.எனவே, அரசு குவிண்டாலுக்கு 1,500 ரூபாய் வழங்கா விட்டால், நெல் சாகுபடியை மறு பரிசீலனை செய்ய உள்ளோம், என்றார்.

குவிகிறது ஏற்றுமதி ஆர்டர் : ஏலக்காய் விலை உயர வாய்ப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2011,23:13 IST

கம்பம் : ஏலக்காய்க்கு ஏற்றுமதி ஆர்டர்கள் குவிந்து வருவதால், விலை உயர வாய்ப்புகள் அதிகரித்துள்ளது. இந்தியாவில் கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் மட்டுமே அதிக பரப்பளவில் ஏலக்காய் சாகுபடியாகிறது. அதிக பரப்பளவில் சாகுபடி நடந்தாலும், விளைச்சல் மற்றும் விலையில் விவசாயிகளுக்கு பாதிப்பு தொடர்கிறது. ஓராண்டாக, கிலோவிற்கு சராசரியாக 1,300 ரூபாய் வரை கிடைத்தது. சில மாதங்களாக இது படிப்படியாக குறையத் துவங்கி, தற்போது கிலோவிற்கு சராசரியாக 700 ரூபாய் மட்டுமே கிடைக்கிறது. தற்போது, காய் எடுப்பில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதனால் சந்தைக்கு நல்ல வரத்து உள்ளது. குவைத், சவுதிஅரேபியா உள்ளிட்ட அரபு நாடுகளில் இருந்து ஏற்றுமதி ஆர்டர்கள் குவிகிறது. அரபு நாடுகளில் ஏலக்காயை பயன்படுத்தி "காபா' என்ற பானம் தயாரித்து வீட்டிற்கு வருபவர்களுக்கு வழங்குவது வழக்கம். ரம்ஜான் பண்டிகையை ஒட்டி இந்த ஆர்டர்கள் கிடைத்துள்ளன. மேலும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வடமாநிலங்களில் ஏலக்காய்க்கு கிராக்கி இருக்கும். எனவே ஏலக்காய் விலை அதிகரிக்கும் என்று வியாபாரிகளும், ஸ்பைசஸ் அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## ***விளைபொருட்களை விற்பனை செய்யும்போது விவசாயிகள் பயன்பெறும் வகையில் புதிய திட்டம் அமைச்சர் செங்கோட்டையன் பேச்சு***

*தஞ்சாவூர், ஆக.1–*

*விளைபொருட்களை விற்பனை செய்யும்போது விவசாயிகளும், நுகர்வோர்களும் பயன்பெறும் வகையில் புதிய திட்டம், வரும் பட்ஜெட்டில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவிப்பார் என அமைச்சர் செங்கோட்டையன் பேசினார்.*

*கண்காட்சி தொடக்கம்*

*தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, பெரம்பலூர், கரூர், ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களை சார்ந்த விவசாயிகள் கண்டு பயன்பெறும் வகையில் தஞ்சை நாஞ்சிக்கோட்டை சாலையில் உள்ள காவேரி திருமண மண்டபத்தில்*

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மாவட்ட அளவிலான வேளாண்மை கருத்தரங்கு மற்றும் கண்காட்சி தொடக்க விழா நேற்றுகாலை நடந்தது. விழாவிற்கு வேளாண்மைத்துறை ஆணையர் சந்தீப்சக்சேனா தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக வேளாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் கலந்து கொண்டு வேளாண்மை கண்காட்சி அரங்கை திறந்து வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

வேளாண்மைத்துறை நாட்டின் முதுகெழும்பு. விவசாயிகளுக்காக முதல்–அமைச்சர் ஜெயலலிதா பல்வேறு சலுகைகளை அறிவித்து நிறைவேற்றி வருகிறார். டி.ஏ.பி. உரம் பற்றாக்குறையாக இருக்கிறது என்று பிரதமருக்கு முதல்– அமைச்சர் கடிதம் எழுதினார். முதல் கடிதமே வேளாண்மைத்துறைக்காக தான் எழுதினார். தமிழகத்தின் தேவையானது 47 ஆயிரம் மெட்ரிக் டன் டி.ஏ.பி. உரமாகும். ஆனால் 26 ஆயிரம் டி.ஏ.பி. உரம் கிடைத்து இருக்கிறது.

சுதந்திரம் பெற்ற பிறகு மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12–ந் தேதி தண்ணீர் திறந்து விடுவதற்கு பதிலாக ஜூன் 6–ந் தேதியே தண்ணீரை திறந்துவிட்ட பெருமை முதல்–அமைச்சர் ஜெயலலிதாவையே சாரும்.

புதிய திட்டம் அறிமுகம்

மேலைநாடுகளில் 30 சதவீதத்திற்கு மேல் லாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்யக்கூடாது என சட்டம் உள்ளது. இந்தியாவில் அச்சட்டம் நிறைவேற்றப்படவில்லை. இதனால் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களை இடைத்தரகர்கள் வாங்கி, அந்த பொருட்களை 200, 300 மடங்கு விலை வைத்து பொதுமக்களிடம் விற்பனை செய்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு எந்த லாபமும் இல்லை. விவசாயிகளுக்கு தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். அதேபோல் நுகர்வோர்களுக்கும் குறைந்த விலையில் விளைபொருட்களை கிடைக்க வேண்டும் என்பதற்காக புதிய திட்டத்தை வரும் பட்ஜெட்டில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவிக்க உள்ளார்.

இதனால் எதிர்காலம் விவசாயிகளுக்கு பிரகாசமான எதிர்காலமாக இருக்கும். வேளாண்மைத்துறையில் பெரும் மறுமலர்ச்சியை நிச்சயம் அடைவோம். வேளாண்மை நாட்டின் முதுகெழும்பு என்று நினைத்து உற்பத்தியை பெருக்க விவசாயிகள் முன்வாருங்கள். உங்களுக்கு இந்த அரசு உற்றதுணையாக இருக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

# உளுந்தூர்பேட்டை பகுதியில் அறுவடை மக்காச்சோளம் விலை சரிவு

பதிவு செய்த நாள் : 8/1/2011 0:29:25



உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை பகுதியில் மக்காச்சோளம் அறுவடை நடந்து வருகிறது. விலை குறைவால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். விழுப்புரம் மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள பகுதிகள் விவசாயத்தையே நம்பியுள்ளன. கடந்த 2 வருடங்களுக்கும் மேலாக வறட்சியை தாங்க கூடிய மக்காச்சோளத்தை பயிரிட்டு வருகின்றனர்.

உளுந்தூர்பேட்டை, பாதூர், செங்குறிச்சி, வண்டிப்பாளையம், சின்னக்குப்பம், பாண்டூர், களமருதூர், பிள்ளையார்குப்பம், புகைப்பட்டி, எறையூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் தற்போது அதிக அளவு மக்காச்சோளம் பயிரிட்டு வருகின்றனர். ஒரு கிலோ விதை சோளம் ஸி120 முதல் வீரிய ரக மக்காச்சோளத்தின் விதை ரூ.200 வரை வாங்கி பயிரிட்டு வருகின்றனர். கடந்த இரண்டு மாத காலமாக பயிரிடப்பட்ட மக்காச்சோளம் அறுவடை செய்யும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டியில் மக்காச்சோளத்தின் விலை தினந்தோறும் ஏற்றம், இறக்கமாக இருந்து வருகிறது. கடந்த மாதம் ஒரு கிலோவின் விலை ரூ.12 முதல் ரூ.15 வரை போனது. ஆனால் தற்போது ஒரு கிலோ ரூ.11க்கு போவதாக தெரிகிறது. இது குறித்து விவசாயி கோதண்டபாணி கூறும்போது, மக்காச்சோளத்தை வியாபாரிகள் அதிக அளவு கொள்முதல் செய்து கொள்கின்றனர். ஆனால் விலை மட்டும் இறங்கு முகமாகவே உள்ளது. இதனால் விவசாயிகள் நஷ்டம் அடையும் நிலை உள்ளது என்றார்.

# தேயிலை தூள் தேக்கம்

பதிவு செய்த நாள் : 8/1/2011 0:28:2



குன்னூர்: குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் கடந்த வியாழன், வெள்ளி கிழமைகளில் தேயிலை தூள் ஏலம் நடைபெற்றது. மொத்தம் 17.60 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 12.16 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.44 லட்சம் கிலோவும் அடங்கும். ஏலத்தில் ரஷ்யா, பாகிஸ்தான் உள்ளிட்ட வெளிநாட்டு வர்த்தகர்கள் தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்தனர்.

உள்ளூர் வர்த்தகர்கள் பங்களிப்பு குறைவாகவே இருந்தது. இதனால் 23 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது. கிலோவுக்கு ரூ.3 வரை விலை குறைந்தது. வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.36 முதல் ரூ.40, உயர் வகை ரூ.80 முதல் ரூ.125, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.40 முதல் ரூ.45, உயர் வகை ரூ.85 முதல் ரூ.133 வரையிலும் விலை கிடைத்தது. சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.155, ஆர்தோடக்ஸ் ரகத்திற்கு ரூ.191ம் விலை கிடைத்தது.